


# தமிழர் இல்லமெல்லாம் மணக்கட்டும்

# உலகத் தமிழ்க் களஞ்சியம்

"மொழியும் கலையும் வாழ்வியலும் பெரும் மாற்றம் பெற்றுள்ளன. அறிவியல் விரிவடைந்துள்ளது. மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைப் பெற்றுள்ள தமிழ் இன்று எட்டுத் திசைகளிலும் ஐம் பெருங்கண்டங்களிலும் விரிந்து பரவியுள்ளது.

அவற்றை இங்கு கழுகுப் பார்வையாக, ஒரு நுண்ணோக்கி வழியாக பார்க்க முயன்றுள்ளோம். இது பெருங்கடலில் சிறு



வலைவீசி மீன் பிடிக்க முயலும் கதைதான். மூவாயிரம் பெருந் தொகுதிகளாக விரிய வேண்டிய தகவல்களை மூன்று சிறு தொகுதி களில் அடக்கியுள்ளோம். என மிக அடக்கமாக அமைதிக்கு மறு பெயர் பெற்ற டத்தோ ஆ. சோதிநாதன் உலகத் தமிழ்க் களஞ்சியம் நூல் வெளி யீட்டு விழாவில் பேசியிருக்கிறார்.

அண்மையில் உலகத் தமிழ்க் களஞ்சியம் நூல்வெளியீடு தமிழகத்தில் தமிழறிஞர்கள் முன்னிலையில் நடைபெற்றுள்ளது.

தலைநகர் உமா பதிப்பகத்தின் சார்பில் உலகத் தமிழ்க் களஞ்சியம் மூன்று தொகுதிகளாக 2000க்கும் மேற்பட்ட பக்கங்களில் 16,000க்கும் மேற்பட்ட செய்திகளைத் தாங்கி தமிழின் வல்லமையைத் தமிழர் உணர வழிகாட்டும் அற்புத அறிவுக் களஞ்சியமாக தொகுக்கப்பட்டு வெளிவந்துள்ளது. இதற்கு காரணமாக இருந்தவர் டத்தோ ஆ. சோதிநாதன்.

அவரின் பேச்சிலே இருந்த அடக்கம், நூலிலே வெற்றியாய் எதிரொலிக்கிறது.




தமிழ்-தமிழர், தமிழ்நாடு, அயலகத் தமிழர், தமிழ் இலக்கணம், 600 ஊர்கள் 800தமிழ் இதழ்கள், ஆயிரத்திற்கும் மேற்பட்ட பல துறையைச் சேர்ந்த பெருமக்கள், தமிழின் முதல் திரைப் படம் முதல் பிப்ரவரி 2016 வரை வெளிவந்த நான்காயிரத்திற்கும் மேற் பட்ட திரைச் செய்திகள் என தொகுக் கப்பட்டுள்ளது உலகத் தமிழ்க் களஞ்சியம்.

அகர வரிசையில் மட்டுமின்றி அகராதி, அமைப்பு, அயலகத் தமிழர் ஆடை அணிகலன்கள் இஸ்லாம், இசை, இதழியல் இந்து, சமண, பௌத்த சமயங்கள், இலக்கணம் இலக்கியம், இலங்கைத் தமிழர், உணவு, ஊர்கள் கல்வி, சட்டம், சிற்பம், ஓவியம் சோதிடம் என 39 தலைப்புகளில் மலர்ந்துள்ள உலகத் தமிழ்க் களஞ்சியம் தமிழர் இல்லமெல்லாம் இருக்க வேண்டிய அரிய பொக்கிஷமாகும்.

க.ப.அறவாணன், முனைவர் இ.ஜே.சுந்தர் முதன்மைத் தொகுப்பாசிரியராகவும் ஒருங்கிணைப்பாளராகவும் பொறுப்பேற்று பல ஆண்டுகள் பலரின் உழைப்பில் வெளிவந்துள்ளது உலகத் தமிழ்க் களஞ்சியம்.

உலகளாவிப் பரந்து விரிந்த படைப்புகளைத் தொகுத்தும் விரித்தும் வகைப் படுத்தியும் திரட்டி அமைத்திருப்பது அரிதான செயல். அதனைச் சிறப்பாக முடித்து தலைநகர் உமா பதிப்பகம் உலகத் தமிழ்க் களஞ்சியத்தை வெளி யிட்டிருப்பது மிகப் பெரிய சாதனையாகும்.

தமிழை நேசிக்கின்ற தமிழரை நேசிக்கின்ற ஒருவரால்தான் இது போன்ற தமிழ் சார்ந்த பெரும் பணியில் துல்லியமாகப் பணி யாற்றி வெற்றி பெற முடியும்! அதற்கு



உலகத் தமிழ்க் களஞ்சியம் உரு வாக்க முறையான திட்டமிடல், தக்கார் பெருந்துணை பொருள் வளம் அமைத் திருக்க வேண்டும். 2004ல் தமிழகத் தலைநகர் சென்னையில் அமர் பேரறிஞர் முனைவர் க.ப.அறவாணன் இல்லத்தில் ஒன்று கூடி உலகத் தமிழ்க் களஞ்சியத்திற்கான திட்டமிடல் உருவாக்கப்பட்டதாக டத்தோ ஆ. சோதிநாதன் கூறியிருக்கிறார்.

சிறப்பு அறிவுரைஞராகப் பேராசிரியர்




முன்னுதாரணமாய் இருந்து பெரும் பொருட் செலவில் உலகத் தமிழ்க் களஞ்சியத்தை தமிழுலகுக்கு தந்த தமிழ் நெஞ்சர் டத்தோ சோதிநாதன் போற்றுதலுக்குரியவர், வணக்கத் திற்குரியவர் என்பது உண்மை.

உலகத் தமிழ்க் களஞ்சியம் ஆசிரியர்கள், மாணவர்கள், இதழாளர்கள், ஆய்வாளர்கள், இலக்கணம், இலக்கியம், கற்க விரும்புவோர் அனைவருக்கும் உடனிருந்து உதவும் தோழன் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமேயில்லை.

- கு.ச. இராமசாமி